**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை : **திரு. ப. சரவணன், பி.எல்.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்

2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19–ஆம் நாள் புதன் கிழமை

**அசல் வழக்கு எண்.332/2022**

**CNR. No. TNDG01-004426-2022**

P. கோவிந்தராஜ் .... வாதி

/எதிர்/

G. வெங்கடேசன் .... பிரதிவாதி

இவ்வழக்கானது இன்று 19.10.2022–ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. R.V. பஞ்சாட்சரம் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

தாவா தொகையான ரூ.11,01,333/–ஐயும், அதற்கு பிராது தேதி முதல் 12% பின்வட்டியும் மற்றும் செலவு தொகையும் சேர்த்து பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டுமென உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

2. **வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :–**

கடந்த 02.10.2021 அன்று பிரதிவாதி, வாதியிடம் ரூ.10,00,000/–ஐ கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடனுக்கு ஆதரவாக 21.10.2021 தேதியிட்ட ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி காசோலையை கொடுத்தார். மேற்படி காசோலையை 21.10.2021

அன்று வாதி தனது கணக்கு உள்ள இந்தியன் வங்கி, திண்டுக்கல் கிளையில் வசூலுக்கு போட்டபோது பிரதிவாதியின் கணக்கில் போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது. காசோலை திருப்பப்பட்ட விவரத்தை பிரதிவாதிக்கு தெரிவித்தபோது காசோலைக்குரிய தொகையை செலுத்திவிடுவதாக பிரதிவாதி சொல்லி காலங்கடத்தி வந்தார். காசோலை தொகையை பைசல் செய்ய வேண்டி, 23.11.2021 அன்று வாதி, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதை பிரதிவாதி பெற்றுக் கொண்ட பின்னரும் காசோலை தொகையை பிரதிவாதி செலுத்தவில்லை. ஆகவே, இந்த வழக்கு.

**3.** வாதியின் தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. **<u>தீர்விற்குரிய பிரச்சனை :</u>**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி இவ்வழக்கில் கோரியுள்ளவாறு தாவா தொகையான ரூ.11,01,333/—ஐயும், அதற்கு பிராது தேதி முதல் 12% பின்வட்டியும் கிடைக்கக் கூடியதா? இல்லையா? என்பதேயாகும்.

5. வாதியின் குறிப்பான வழக்கு யாதெனில், கடந்த 02.10.2021 அன்று பிரதிவாதி, வாதியிடம் ரூ.10,00,000/—ஐ கடனாக பெற்றுக் கொண்டு, மேற்படி கடனுக்கு ஆதரவாக 21.10.2021 தேதியிட்ட வா.சா.ஆ.1 ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி காசோலையை கொடுத்ததாகவும், வா.சா.ஆ.1—ஐ 21.10.2021 அன்று வாதி தனது கணக்கு உள்ள இந்தியன் வங்கி, திண்டுக்கல் கிளையில் வசூலுக்கு போட்டபோது பிரதிவாதியின் கணக்கில் போதிய பணம் இல்லை என வங்கியிலிருந்து காசோலை வா.சா.ஆ.2 மூலம் திருப்பப்பட்டது என்பதாகும். மேற்படி விவரத்தை பிரதிவாதிக்கு தெரிவித்தபோதும் காசோலைக்குரிய தொகையை செலுத்திவிடுவதாக பிரதிவாதி சொல்லி காலங்கடத்தி வந்ததால், 23.11.2021 அன்று வாதி, பிரதிவாதிக்கு வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை பிரதிவாதி பெற்றுக் கொண்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4,

பின்னரும் தாவா தொகையை பிரதிவாதி பைசல் செய்யவில்லை என்பதாகும். வா.சா.1–ன் சாட்சியத்திற்கு மாறுபட்ட விதத்தில் சாட்சியம் எதுவும் இல்லை. ஆகவே, 02.10.2021 அன்று பிரதிவாதி, வாதியிடம் ரூ.10,00,000/–ஐ கடனாக பெற்றுக் கொண்டு அந்த தொகையை வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதாக ஒப்புக் கொண்டு 21.10.2021 தேதியிட்ட வா.சா.ஆ.1 காசோலையை கொடுத்துள்ளார் எனவும், காசோலையை வசூலுக்கு போட்டபோது அது வசூலாகாமல் திரும்பி வந்தது எனவும், ஆகவே, வாதிக்கு, பிரதிவாதி தாவா தொகையை பின்வட்டி மற்றும் செலவு தொகையுடன் செலுத்த கடமைப்பட்டவர் என இந்த பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, பிராது தொகை ரூ.11,01,333/–ஐயும், அசல் தொகை ரூ.10,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% பின்வட்டியும், தீர்ப்பு தேதி முதல் தொகை வசூலாகும்வரை 6% பின்வட்டியும் வழக்கின் செலவு தொகையுடன் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த உத்தரவிட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைத்திருத்தி இன்று 2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.10.21 15:02:46 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

**வாதி தரப்பு சாட்சிகள் :**

1. வா.சா.1 – கோவிந்தராஜ்

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

1. வா.சா.ஆ.1 – 21.10.2021–ஆம் தேதியிட்ட பிரதிவாதி வழங்கிய காசோலை. அசல்.
2. வா.சா.ஆ.2 – 22.10.2021–ஆம் தேதியிட்ட திண்டுக்கல் இந்தியன் வங்கியிலிருந்து காசோலை திருப்பப்பட்டதற்கான

குறிப்பாணை. அசல்.

3. வா.சா.ஆ.3 – 23.11.2021–ஆம் தேதி வாதி, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு. நகல்.

4. வா.சா.ஆ.4 – 25.11.2021 தேதியிட்ட பிரதிவாதி, வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை. அசல்.

P SARAVANAN Digitally signed by P SARAVANAN Date: 2022.10.21 15:02:56 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.

Additional District Court,

Dindigul.

O.S. No. 332/2022

Judgment : FAIR

Dated : 19.10.2022